International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 01 Issue: 01 July to September 2019 www.irjtsjournal.org

# குறுந்தொகையில் வாழ்வியல் செய்திகள்

த.தாரணி எம்.ஏ.,எம்.பில்

*உதவிப்பேராசிரியர்,*

*தமிழ்த்துறை,*

*சசூரி கலைமற்றும் அறிவியல் கல்லூரி,*

*விஜயமங்கலம்.*

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் மனிதவாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடிஆகும். மனிதவாழ்வுமலரநாம் கடைபிடிக்க வேண்டியவற்றை அடிமாறாமல் நமக்கு எடுத்துக் காட்டும் உயிரோவியங்கள் சங்க இலக்கியங்கள். குறுகியஅடிகளால் உயர்ந்தகருத்துக்களைக் கொண்டநூலென்னும் சிறப்புடையது. தொகைநூல்களில் முதன் முதலில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுவதுகுறுந்தொகையாகும். அகவற்பாவில் அமைந்துநாலடிமுதல் எட்டடிகளையுடையது. இதனைத் தொகுத்தவர் பூரிக்கோஎன்பவராவார். இத்தகையஅகவாழ்வைக்காட்டும் குறுந்தொகையில் இல்வாழ்வின் சிறப்புகள் பற்றி அராய்வதுமிகவும் அவசியமாகும்.

**அகவாழ்க்கை**

குறுந்தொகை காட்டும் அகவாழ்வு இல்வாழ்வினை எடுத்துக்காட்டும் காதல் வாழ்வாகும். பண்டையமக்கள் இல்வாழ்வினைகளவு, கற்பு என இருவகையாகப் பிரித்தனர். திருமணத்திற்கு முந்தையவாழ்வு ‘களவு’ஆகும். திருமணத்திற்குப் பின்புவாழும் வாழ்வினை‘கற்பு’என்பர். இந்த அகவாழ்வினைத் தொல்காப்பியர் கூறும் முதல், கரு, உரிப்பொருள்களைக் கொண்டு இயற்கையின் பின்னணியில் மக்களின் வாழ்வியலைஉணர்வின் வெளிப்பாட்டினை அழகாகக் காட்டுகின்றன, குறுந்தொகைப் பாடல்கள்.

**அன்புடைமை**

அக இலக்கியத்தில் காதல் வாழ்வுவியந்தோதப்படுகிறது. ஊழ்வினைவயத்தால் முன்பின் அறியாத உள்ளங்கள் இரண்டு அன்பால் இணைந்தகாதல் வாழ்வைக் குறுந்தைாகைநூலில்,

“யாயும் ஞாயும் யாராகியரோ?

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழிஅறிதும்

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடையநெஞ்சம் தாம்கலந் தனவே” (குறுந் - 40)

**இல்லறச் சிறப்பு**

தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் பாங்கினைசெவிலிநற்றாயிடம் கூறுகிறாள். தலைவிதன் தலைவனுக்கு வேண்டியவற்றை அவன் மகிழும்படி செய்துதருகிறாள் எனக்கூறி மகிழ்கின்றாள். இதனை

“முளிதயிர் பிசைந்துகாந்தள் மெல்விரல்

கழுவுறுகலிங்கம் கழாதுஉடீஇ

குவலைஉன்கண் குய்ப்புகைகழுமத்

தான் துழந்துஅட்டதீம்புலிப்பாகர்

இனிதுஎனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே". (குறுந் - 167)

என்றபாடலடிகள் மூலம் அறியலாம். தலைவியின் புறத்தேற்றம் கண்டுவெறுக்காமல் அவன் மனதில் உள்ளஅன்பின் சிறப்பினைஉணர்ந்துமகழ்வுடன் உணவுஅருந்தினான். தன்மீதான பேரன்பினைஎண்ணி தலைவன் தலைவியைப் பாராட்டினான்.

**அன்பு வெளிப்பாடு**

தலைவன் மீதுதீராதுஅன்புகொண்டவள் தலைவி தலைவனைப் பிரியாதுபிறவிதோறும் இவ்வன்புதொடர வேண்டும் என்பது தலைவியின் விருப்பமாகும். இதனை,

"இம்மைமாறிமறுமைஆயினும்

நீஆகியர்எம் கணவனை

யான் ஆகியோர்நின்நெஞ்சுநேர்பவளே" (குறுந் - 49)

இல்வாழ்வில் பொருளீட்டுதல் காரணமாகதலைவன் தலைவியைபிரிகின்றான். இந்த பிரிவுக்காலத்தில் தலைவி ஆற்றியிருந்தல் என்பது சிறப்பிற்குரியது. தலைவன் மீதான அன்பினால் தலைவியின் நலம் சிறிதும் குறையவில்லை. என்பதை பின்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

"மட்டம் பெய்தமணிக்கலத்தன்ன

தொல்லைத் திங்கள் நெடுவெண் ணிலவின்

மணந்தனன் மன் நெடும் தோளே

இன்றும் முல்லைமுகைநாறும்மே" (குறுந் - 193)

தலைவன் பொருளீட்டுவதற்குச் சென்றகாட்டுவழியின் கொடுமையினை எண்ணிவருந்துகின்றாள், இப்பாடலில் தலைவன் களவுக்காதத்தால் எம் தோள்களைத் தழுவியது இன்றளவும் மாறாதுஎன்னைப் பாதுகாக்கின்றது என்று கூறுவதாய் அமைவது இதன் சிறப்பாகும்

"ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு

நயந்தனன் கொண்டகேண்மை

பயந்தக் காலும் பயப்புஒல்லாதே" (குறுந் - 283)

தலைவன் பொருளீட்டுவதற்குச் சென்றகாட்டுவழியின் கொடுமையினை எண்ணிவருந்துகின்றாள். இதனால் தலைவனக்குத் துன்பம் நேருமே என்று எண்ணுவது தலைவன் மீது கொண்ட அன்பே ஆகும்.

"வினையே ஆடவர்க்கு உயிரேவாண்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவரே உயிர். (குறுந் - 135)

**தலைவன் தலைவியரின் அன்புநிலை**

தலைவன் மீது கொண்ட அன்பால் நற்பண்புடையளாகத் தலைவிதிகழ்ந்தாள் தலைவிதான் தலைவிதான் தலைவன் மீது கொண்ட அன்பு எத்தகையது என்பதைப் பின்வரும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

“நிலத்தினும் பெரிதேவானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவின்றேசாரல்

கருங்கோற் குறிஞசிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடுநட்பே” (குறுந் - 03)

தலைவனானநட்பானது நிலத்தைக் காட்டிலும் பெரியது, வானைக் காட்டிலும் உயர்ந்தது என்று கூறுவதன் மூலம் தலைவியின் காதல் உள்ளத்தினை நாம் நன்கு உணராலாம்.

சங்ககால அகவாழ்வின் அடிப்படை இல்லறமாகும். சங்ககால மக்கள் இல்லறப் பெருமையுணர்ந்து இனியவாழ்வில் ஒன்றி மகிழ்ந்தகாலம் எனலாம். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் இன்பம் குறித்த செய்திகளை எடுத்துக் கூறுவனவாய் அமைவன இப்பாடலாகும்.

**புற வாழ்க்கை**

சங்ககாலச் சமுதாயத்தில் வாழ்க்கைக்குத் தேவையான பொருளை ஆண்களே தேடினர். ஆகையால் தான் தாம் தேடிய செல்வத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்த வேண்டும் எனும் கொள்கையுடையவர்களாக இருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டுவரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரிவர்தாம் தேடியபொருள் இல்லாத நிலையை இரத்தலினும் இழிவாகக் கருதினர். இதனை,

“உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்

இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்

சொல்லியவன்மை தெளியக் காட்டிச்

சென்றனர்வாழிதோழி....” (குறுந் - 283)

எனும் பாடல் வரிகளில் அறியலாம். இதே கருத்தினைவள்ளுவர்.

“தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற் பொருட்டு” (திருக்குறள்– 212)

எனும் குறள் வழி அறியலாம்.

தாளாற்றி என்பது தானே முயற்சி செய்வது என்று பொருள் படும்.

**முடிவுரை**

புறத்தே தோன்றும் காட்சிகளைப் புனைந்துகாட்டும் ஆற்றலினும், அகத்தே தோன்றும் காட்சிகளை, உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் கொண்டு உரைக்கும் ஆற்றல் சிறந்ததாகும். பிற நூல்களைக் காட்டிலும் உரையாசிரியர்களால் மேற்கோளாக அதிகளவில் எடுத்தாளப்பட்டநூல் என்ற சிறப்பிற்குரிய குறுந்தொகைப் பாடல் தலைவன், தலைவியரின் அன்புநிலை இல்வாழ்க்கையின் சிறப்புகளை எடுத்துக்கூறி உலகியலை செம்மையடையச் செய்கிறது.

**துணைநூற் பட்டியல்**

1. குறுந்தொகை - பாடல் 40
2. குறுந்தொகை - பாடல் 167
3. குறுந்தொகை - பாடல் 49
4. குறுந்தொகை - பாடல் 193
5. குறுந்தொகை - பாடல் 283
6. குறுந்தொகை - பாடல் 135
7. குறுந்தொகை - பாடல் 283
8. குறுந்தொகை - பாடல் 03குறுந்தொகை - பாடல் 40
9. திருக்குறள்.- 212.